IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No.122/2023**

| DEPOSITION OF WITNESS | DW.1 |
|---|---|

| NAME | புஷ்பா |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of **27.11.2024**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

**1.** எனது தந்தை குப்பய்யன் செட்டியார் காணாமல் போன சம்பந்தமாக இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். 27.06.2013 அன்று எனது வீட்டிலிருந்து டீ குடிக்க சென்றவர் திரும்ப வரவில்லை. காணாமல் போய்விட்டார். காணாமல் போன அன்று எனது தந்தைக்கு 80 வயது இருக்கும்.

2. காணாமல் போன பிறகு 3 மாதம் கழித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். எனது கணவர் ஈஸ்வரன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். வா.சா.ஆ.5 ஆன மனு கிராம நிர்வாக அலுவலரிடம் எனது தந்தை காணாமல் போன 5, 6 மாதங்கள் பிறகு கொடுத்தேன்.

3. வா.சா.ஆ.4 ஆன மனு குடியாத்தம் வட்டாட்சியரிடம் எனது தந்தை காணாமல் போன ஒரு வருடம் பிறகு கொடுத்தேன். காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு எனது கணவர் காவல்நிலையத்தில் அடிக்கடி சென்று விசாரிப்பார். சென்னையிலும் தேடி பார்த்தோம் கிடைக்கவில்லை.

4. எனது தாயார் உயிருடன் இல்லை. 01.03.2014 அன்று இறந்துவிட்டார். எனது உடன் பிறந்தவர் ஒரு சகோதரி தான் 5 வது பிரதிவாதி முனியம்மாள் ஆவார். 5 வது பிரதிவாதி முனியம்மாள் 6 மாதங்க்ளுக்கு முன்பு காலமாகிவிட்டார். அந்த விவரத்தை நான் நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கூறினேன். நான் தாக்கல் செய்த முதல் பிரமாண வாக்குமூலத்திலும், எனது சகோதரி 5 வது பிரதிவாதி காலமான விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. 5 வது பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்காமல் வழக்கு நடத்துவது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 5 மனு பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். 2 மனுவிலும் தேதி குறிப்பிட்ட மை மற்ற விவரங்கள் மையும் வேவ்வேறாக உள்ளது என்றால் சரிதான்.

6. தாவாவிலும், முதல் பிரமாண வாக்குமூலத்திலும எனது தந்தை எங்கிருந்த காணாமல் போய்விட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை காணாமல் போன தேதி தாவாவிலும் எனது சாட்சியத்திலும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல.

7. நான் வட்டாட்சியரிடம் உரிய முறையில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதரி காலமான விவரத்தை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளனார் என்றால் சரியல்ல. எனது தாவாவிலும், எனது பிரமான வாக்குமூலத்திலும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. தந்தை காணாமல் போனது சம்பந்தமாக துண்டுபிரசுரம் ஏதேனும் வினியோகம் செய்தேனா என்றால் இல்லை.

8. எனது வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. காணாமல் போனது சம்பந்தமாக வட்டாட்சியருக்கு இறப்பு சான்றிதழ் கொடுக்க அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/.M.N.Rajanandhivarmasiva,
District Munsif,
Gudiyattam.